உ

கணபதி துணை.

திருத்தணிகை

வெண்பாவந்தாதி.

இஃது.

பலவை - சோமசுந்தரமுதலியாரவர்களுடைய

குமாரரும்

தஞ்சைமாநகரத்துக்கடுத்த சுங்கந்தவிழ்த்தா

னென்னும்

திவ்வியக்ஷேத்திரத்தின்கண்

திருமூலமரபிலெழுந்தருளிய

சுயம்பிரகாசசுவாமிகளின்

சிஷ்யருமான

பலவை - சண்முகமுதலியாரால்

இயற்றப்பட்டு

அன்பளிப்பு

சென்னை.

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1890

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR MADRAS

திருத்தணிகை

வெண்பாவந்தாதி.

விநாயகர் காப்பு.

சீராருந்தெய்வத் திருத்தணிகைவேலவன்மேற்
பேராருமந்தாதி பேசுதற்கு - நேராக
வந்தெனக்குமுன்றோன்று பாதேவன்முன்றோன்றல்
தந்திமுகத்தெந்தையிரு தாள்.

நூல்.

திருத்தணிகைவேன்முருகா நின்னைவந்தாளற்
கொருத்தருமேயில்லை யுலகில் - வருத்தமெலாம்
போயகலநின்றுட் புனைபே துணையாக
நீயருள்வாயச்சற்று நினைந்து. (௧)

நினையாமுன்னென்னெதிரே நீவந்துதோன்றினை
வினையாவுமிங்கிரிந்து வீயும் - தனையுணரு
மெய்ப்போதப்பவமெய்யது மேலாந்தணிகைமலை
யப்பாநின்றுளே யரண். (௨)

தானென்றறைவார் தனையறிந்தோமென்றுரைப்பார்
தானேதரணியாவுமெனச் சாற்றுவார் - சோணலைந்தார்
ஞானகுருபரனை நற்றணிகைமாமலைவாழ்
தேனைவினோதருந்தா தே (௩)

தேவரெலாம்போற்றுந் திருத்தணிகைமாமலையில்
மேவியடியார் வினைதீர்ப்பான் - ஆவியொடு
காயமெலாமன்னோனை கழற்கேயடைக்கலமாய்
நீயிருப்பாய்நெஞ்சே நிதம் (௪)

நிதமுனமனத்தை நிறுத்தவெருஞானமும்
பதமொன்றதோன்றுமோ பண்பான - சத்தளத்தின்
பொற்றுமரையாள் புகழுந்திருத்தணிகை
பெற்றனகுமரனைப் பேசு. (௫)

பேசுவதுநின்னையே பேணுவதுநின்னையே
யேசுவதுநின்னையே யிவ்வுலகம் - பாசமெலாம்
வெந்தோடச்செய்வாய்நீ வீற்றிருந்ததணிகைக்
கந்தாவென்னையிரங்கிக் கா (௬)

காக்கக்கடனுனக்கே கந்தாவறுமுகவா
நீக்கமிலாமெய்யடியார் நெஞ்சத்தே - தாக்குகின்ற
ஐம்புலனைச்சுட்டறுத்தோ ராயுந்திருத்தணிகை
நம்பியுனையடைந்தே னான். (௭)

நானெனப்பற்றறவாக னாடோறும்போற்றுநினை
யானென்றறிவே னிறைவனே - வானறோய
திருத்தணிகைவாழ்கின்ற தேவேயுன்னன்றி
யொருத்தரையும்வேண்டே னுணா. (௮)

உணருமறிவும்போ யுண்மைநிலையிற்
கணமேனுமியானிருக்கக் காணேனே - குணமேவும்
வள்ளிதெய்வயானையுடன் வாழுந்திருத்தணிகை
வள்ளலேநல்காய் வரம். (௯)

வரமருள்வாய்நின்றாள் வழுத்துமடியார்க்குப்
பரவுபுகழெல்லாம் படைப்பாய் - குரவனாய்
ஞானவனுபூதிதர னாயேற்குநற்றணிகைப்
பானுவேநிற்கே பரம். (௰)

பரமுனக்கென்றெண்ணிப் பலகாலடைந்தே
னொருகணமேனுமவர்நீ வுனனாய - சுரதருவின்
மிக்கவனேவேலவனே மேவித்தணிகையினிற்
புக்கவனேயுண்மை புகல் (௰௧)

புகலுமளவோநீலப் புட்கரிணிச்சோதி
சகலகலையுங்கூடிச் சாலப் - புகழுநின்
னன்பின்பெருக்காமணித்தணிகையாயத்தன்சீர்
பின்பாரறிந்தடைந்தார் போந்து.

பேறடையவேண்டினேன் பெம்மானேவல்வினைக
ணீறுபடடுவெநதோட நீசினைபபாய - ஆறணியு
மபபனுககுமுனனுரைததா யறபுதமாககாவிவெறபி
னப்பனேநீ காததருள. (௰௩)

அருளுருவமானவுனை யாணடையஞான
வொருமொழியினுண்மை யுரைததற - குரிமையாய்
வாரதொழிந்தககால வணடணிகையாய்துணைதா
ஞரோவறியே னறை. (௰௪)

அறைவேனினனும மனுதினமுமுனறுன்
மறவேனெனைநீ மறவேற - றுறவோாத
நெஞ்சமலாபோறறணிகை நீடுமேலவாழுவுகநதோ
யஞ்சலென்பாயசறறிங கறிநது. (௰௫)

அறிவிறகறிவா யனுதினமுமென்னிற
பிறிவறறிருககுமபிரானே - நெறிகாட்டி
யெனனையோரனபனு யீடேறறுவாயதணிகை
மன்னவனேயெனமுனனே வநது. (௰௬)

வந்துன்றிருககரததான் வாயநதசினமுததிரையைத
தநதருளுயேறகுத தணிகையினிற - சந்ததமும
வீறறிருநதாயுனசீா விளமபுமடியாாசரிதத
தேறறமெளிதாமோ வியமபு. (௰௭)

இயமபுதிருககரஙக ளீராறுடையான்
பயஙகளெலாமநீககப் பணியயான - நயமபொலியும
பேரிகையாககுநதணிகைப் பெமமான்சீரொககாலு
மாரவுரைததேன்புவியி லாயநது (௰௮)

ஆய்ந்துரைககவென்னுலிங காகாதெணககருதிக
காயநதுரைக்கலாமோநீ கணமணியே - சேயபிழைகள்
செயதிடினுந்தாயபொறுதததுத தீாபபாளஃதேபோற
செயதணிகையாயநீ தெளிநது. (௰௯)

தெளிந்துன்னையானறியத் தேவேயிரங்கி
யளிகொண்டென்பொற்று ளளிப்பாய் - களிமிகுந்த
தேனூர்பொழில்சூழ் திருத்தணிகைமாமலைவாழ்
கோனேயெனையாண்டு கொள. (௨௰)

கொள்ளத்தகும்பொருணின் கோதிலாமெய்ப்பதமே
யெள்ளததகுவனமற் றெல்லாமென் - றுள்ளபடி
சந்தானகற்பகம்போற றங்கிததணிகையில்வாழ்
எந்தாயுணரோ னிதென். (௨௧)

என்றைக்குநின்னருள்வந தெயதுமோயானறியேன்
கன்றைபபோனின்று கதறினேன் - இன்றைககே
வாராயதிருத்தணிகை வள்ளலேநிற்றுறநதிவ
ியாரோடுரைததிடுவே னியான். (௨௨)

யானெனதென்றென்னு மகம்பாவமிறறவாக
டானெனவேநிறகுந தனிநிலையிற் - றேனெனச்சொ
லன்பாரடியாக்ட் காணநதநதநதாளு
மன்பாதணிகையை யா. (௨௩)

ஐயாகுமரேசா வப்பாதணிகையோய்
மெய்யாகுஞானமது மேவிடறகுப் - பொய்யாகுங்
காமாதியாமபகைகள் கடடோடேபோயகல
நேமாதிநிஷ்டைகொடு நீ. (௨௪)

நீயேகுருவெனககு நீயேகுலதெய்வம
நீயேயனைத்துமாய் நிற்றலால் - நீயேதா
னிவ்வண்ணஞ்செய தவியல்போதணிகையாய்
யுய்வண்ணம்நீவந் துரை (௨௫)

உரையிறந்துமேலா முயர்துரியவாழ்வீற்
கரையிறந்தகாடசி தந்துகாததான் - விரைநீப
மாலையணிந்ததோள் வள்ளறதணிகையிற்கூா
வேலைப்பிடிததிருந்த வேள். (௨௬)

வேளேதணிகைமலை வீற்றிருக்கும்வேலவனே
கோளேதுநாளேது கூறுங்கால் - கேளையெல்
னுள்ளதேதீவிநிதின் குள்ளொளிதந்தானந்த
வெள்ளத்தேதீயிருக்க வே. (உஎ)

வேலாதிருத்தணிகை மேவியடியார்வினைகள்
வேலால்முடித்தருள்வாய் வித்தகனே - ஆலால
கண்டனுமேகொண்டாடுங் கந்தாவின்னற்புதத்தை
விண்டெவரேசொல்வார் விளம்பு. (உஅ)

விளம்பநீயென்னுளவையே வேதமுடிவைக்
களங்கமறயானுணரக் காட்டி - வளமபெருகுஞ்
சோலைசூழுதென்றணிகை தோன்றினையனேருவொள்
வேலையுடையாயென் வியப்பு. (உகூ)

வியநதெனைநீயாண்டுன் விளாகழறகிழன்பு
நயந்தருள்வையேலதுதா னன்கா - கயங்குலவு
வண்டணிகைமேவிவளர் வள்ளாலயிலேநதுரு
திண்டிறலோய்ஞானத் திரு. (௩௰)

வாழி.

ஆயுமறைவேதியரோ டன்பாற்றிருத்தணிகை
போயுறைக்தவ்வேலவனைப் பூசிப்போர் - நேயமாய்
வாழ்வாகளெஞ்ஞான்றுமாண்புவியில் வெற்றிபெறுத்
தாழ்வாரோவையமிலே தான்.

முற்றும்.